www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு 26

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....

-செங்கை ஆழியான்-

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை முதன் முதல் கட்டிய புவனேகபாகு என்ற பெயர் கொண்டவர் யார்? கல்வெட்டாதாரங்களும் செப்பேட்டாதாரங்களும் இவர் குறித்துக் கிடையாது விடினும் நூலாதாரங்களும் பதிவேட்டுக் குறிப்பாதாரங்களும் உள்ளன. அவை:

'சிங்கையாரியன் சந்தோஷத்துடனிசைந்து கலை வல்லிசிகாமணியாகிய புவனேகபாகுவென்னும் மந்திரியையும் காசிநகர்க்குலோத்துங்கனாகிய கெங்காதர ஐயரெனுங் குருவையும் அழைத்துக் கொண்டு தனது பரிவாரங்களுடன் யாழ்ப்பாணம் வந்திறங்கினான்'என யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலில் ஜோன் கூறுகிறார். சிங்கையாரிய மகராசன் இப்படியே அரசாட்சியைக் கைப்பற்றி நடத்தி வருகையில் புறமதில் வேலையையுங் கந்தசுவாமி கோவிலையும் சாலிவாகன சகாப்தம் 870 ம் வருசத்தில் புவனேகபாகு என்னும் மந்திரி நிறைவேற்றினான் என 'யாழ்ப்பாண வைபவமாலை' என்ற நூல் கூறுகிறது.


யாழ்ப்பாணக் கச்சேரியில் 1882 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட சைவசமயக் கோவில்கள் பதிவேட்டில் பின்வருமாறு காணப்படுகின்றது. 'கந்தசுவாமி கோவில், குருக்கள் வளவு என்ற காணியிற் கட்டப் பெற்றுள்ளது. இது தமிழ் அரசன் ஆரியச்சக்கரவர்த்தியின் பிரதம மந்திரி புவனேசவாகரால் 884 ஆம் ஆண்டளவில் கட்டப்பெற்றது.

நல்லூர்க் கந்தசுவாமிகோயிலின் பிரதம குருக்களாகவிருந்த சுப்பையல் என்பார், 1811 இல் ஆள்வோருக்கு எழுதிய முறைப்பாடு ஒன்றில் கோயிலைக் கட்டியவர் பெயர் புவனேகன்கா எனக் குறிப்பிட்டுள்ளார்.

### புவனேகவாகுகள்

யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றினை நுணுகி ஆராயின் மூன்று புவனேகவாகுகள் ஏதோ ஒவ்வொரு வகையில் வரலாற்றின் போக்கில் சம்பந்தப்பட்டிருப்பதனை அறிய முடியும்.

'இலகிய சகாத்த மெண்ணூற்றெழுபதாம் ஆண்டு' என முற்குறித்த செய்யுள்களில் வரும் சகவருடம் 870 ஆம் ஆண்டு என்றால் அது கி.பி.948 ஆம் ஆண்டாகும். எனவே 948 ஆம் ஆண்டுகளில் அல்லது பத்தாம்




நூற்றாண்டில் வடவிலங்கை அரசில் புவனேகவாகு என்ற அரசர் அல்லது அரசப்பிரதிநிதிகள் இருந்துள்ளனரா? கி.பி. 944 இல் பராந்தகச் சோழ்ன் இலங்கை மீது படையெடுத்து சிங்கள மன்னனைப் புறங்கண்டு சிங்கை நகர் அரசனைக் கொன்று வடவிலங்கையை வென்று ஒரு இராசப் பிரதிநிதியை நியமித்து விட்டுச் சோழநாடு மீண்டான். அந்த இராசப் பிரதிநிதி புவனேகபாகுவாக இருக்கலாம். இக்காலகட்டத்தில் வடவிலங்கையில் புவனேகவாகு என்ற ஒருவன் அரசனாக அல்லது அரசபிரதிநிதியாக இருந்துள்ளான் என்பதற்குச் சில ஆதாரங்களுள்ளன.

பத்தாம் நூற்றாண்டிலே பார்சியாவின் அரசனான டோபாக் என்பவன், கர்ஷாஸப் என்பவனின் தலைமையில் அனுப்பிய படை ஒன்று கலா என்ற துறையில் (கலா என்பது ஊர்காவற்றுறை; களபூமி) இறங்கி இருநாட் பயணதூரமுள்ள ஓரிடத்தில் வாகுவென்னும் அரசனை, வெற்றி கொண்டது என்று அசேதி என்ற பார்சியன் கர்ஷிஸ்ப் நமா என்றும் கிரந்தத்தில் எழுதியுள்ளான். 'பத்தாம் நூற்றாண்டில் வாகு என்னும் பெயருடன் இலங்கை அரசில் யாழ்ப்பாண மொழிந்த பிறவிடத்தில் எவருமிருந்திலர். வாகு என்று பார்சிய நூல் குறிப்பிடும் மன்னன் அல்லது சிற்றரசன் அக்காலவேளையில் சோழரின் அரசப்பிரதிநிதியாக வடவிலங்கையில் விளங்கிய புவனேகவாகுவாக இருத்தல் வேண்டும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் பூசகராக விளங்கிய சின்னமனத்துளார் என்பவர் புவனேகவாகு என்பவருக்கு ஒரு நாள் விருந்து வைத்ததாகவும் அவ்விருந்தில் பரிமாறப்பட்ட பதார்த்தங்கள் ஒவ்வொன்றிற்கும் புவனேகவாகு ஒவ்வொரு வெண்பா பாடியதாகவும் வைபவமாலை குறிப்பிடுகின்றது. இந்தச் சின்னமனத்துளார் சிதம்பர தீட்சிகரின் மகன் ,பெரியமனத்துளாரின் பேரன் நாகதீவின் யாழ்ப்பாண அரசின்) முதல் மன்னனான உக்கிரசிங்கன் காலத்தில் (கி.பி.785 ) தான் பெரியமனத்துளார் இந்தியாவிலிருந்து கோயில் திருப்பணிக்காக இங்கு வந்துள்ளார். எனவே மூன்று தலைமுறைகளை மனதிற்கொண்டு கணிக்கும்போது அசேதி சந்தித்தவாகு, சின்னமனத்துளார் விருந்தளித்த புவனேகவாகுவாக இருத்தல் சாத்தியமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பௌத்த செல்வாக்கும் சிங்கள மக்களது ஆதிக்கமும் மேலோங்கி வந்ததால் உக்கிரசிங்கன் தனது தலைநகரான கந்தரோடையை (கதிரமலை) க் கைவிட்டு புதியதொரு தலைநகரான சிங்கை நகரைத் தனது பெயரில் அமைத்து இடம் பெயர்ந்தான் என ஏற்கனவே கண்டோம். அந்தச் சிங்கை நகர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலமையாது பெருநிலப்பரப்பில் அமைந்தது எனவும் அறிந்தோம். கி.பி. 944 ல் பராந்தச் சோழன் (2ஆம் பராந்தகன்) சிங்கை நகர் மன்னனைக் கொன்று தனது பிரதிநிதியை உத்தர தேசத்தை நிர்வகிக்க நியமித்துள்ளான். எனவே, புவனேகவாகு என்ற இந்த முதலாவது அரசபிரதிநிதி கி.பி. 948 இல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை முதன் முதல் கட்டினானா? அவ்வாறு கட்டியிருந்தால் அது நிச்சயமாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள நல்லூராக இருக்க வாய்ப்பில்லை. சிங்கை நகர் அமைந்திருந்த பெருநிலப்பரப்பிலுள்ள நல்லூராக இருந்திருக்கவேண்டுமெனத் துணியலாம்.

உண்மையில் இன்று கிடைக்கின்ற ஆதாரங்களிலிருந்து பூநகரியில் இன்று இருக்கின்ற நல்லூர் என்ற பிரதேசமே தமிழர் அரசின் புராதன நல்லூர் ஆகும் எனக் கொள்வதில் தவறில்லை. கி.பி.948 இல் முதலாவது நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அமைக்கப்பட்டது என முடிவு செய்தால் அக்கோயில் பூநகரி நல்லூரில் கட்டப்பட்டிருக்கவேண்டும்.

யாழ்ப்பாண வரலாற்றில் சம்பந்தப்படும் இரண்டாவது புவனேகவாகு கி.பி. 1248 ஆம் ஆண்டில் இடம் பெறுகின்றன.கைலாயமாலை குறிப்பிடும் செய்யுளிலுள்ள 'இலக்கிய சகாத்த மெண்ணூற்றெழுபதாமாண்டு' என்ற வரி குறிப்பிடும் சக வருடம் 870 ஆம் ஆண்டை கி.பி. 1248 ஆம் ஆண்டெனக் கணிக்கின்றனர்.

யாழ்ப்பாண வைபவ விமர்சனம் என்ற சரித்திர நூலின் ஆசிரியரான சுவாமி ஞானப்பிரகாசர் கருத்தின்படி 'எண்ணூற்றெழுபது என்பது 870 அன்று. ஆயிரமாகிய பேரெண்ணும் நூற்றியெழுபதும் சேர்ந்த கணக்காகும் எனத் தோன்றும். எண் என்றால் 1000. இந்த 1000 + 107+ 1107 சகவருடம் 1107 ஆம் ஆண்டு என்றால், அது கி.பி.1248 ஆம் ஆண்டைக் குறிக்கும் என்பதாகும்.

கி.பி.1242 இல் உத்தரதேசத்தின் மன்னனாக விளங்கியவன் விசயகாலிங்க ஆரியச்சக்கரவர்த்தியாவான். இவனே வைபவமாலை குறிப்பிடும் பாண்டிமழவன் என்பவன் அழைத்து வந்த சிங்கையாரியான் ஆவான். இந்த சிங்கையாரிய மன்னனுக்குப் புவனேகவாகு என்பவன் மந்திரியாக இருந்துள்ளான்.

யாழ்ப்பாண இராச்சியம் 13 ஆம் நூற்றாண்டில் தான் உருவாகி நிலைத்திருந்ததெனக் கருதும் முதலியார் செ. இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோருட்பட நவீன வரலாற்றறிஞர்கள் சிலரும் கந்தனாலயம் யாழ்ப்பதாண இராச்சியம் செழித்தோங்கியிருந்த ஒரு காலகட்டத்தில் தான் அமைக்கப்பட்டிருக்கவேண்டும் எனக் கருதுகின்றனர்.

(தொடரும்)

படிப்பகம்